ஒரு சமயம் தனது நாட்டை நாடிவந்த நாரதரை வரவேற்று வந்தனமளித்து ஆசனத்தே அமர்த்தி அம்பரீஷ மகாராஜன், "சகல மாதங்களிலும் வைசாகம் (வைகாசி)மிகச் சிறந்தது; மாதவனுக்கு மிகப் பிரியமானது என்று கூறுகிறார்களே? அம்மாதத்தில் எப்படி ஸ்நானம் செய்வது? எப்படி அச்சுதனை அர்ச்சிப்பது? ஏன் அவருக்கு அது அதிகப் பிரியமானது?" என்று கேட்டான். நாரதர், மஹா விஷ்ணு ஸ்ரீ லக்ஷ்மி தேவிக்குக் கூறியபடி தன் பிதாவான பிரும்மா தனக்குச் சொன்னவண்ணம் அதைக் கூறினார். வித்தைகளில் வேதம், மந்திரங்களில் பிரணவம், மரங்களில் கல்ப விருக்ஷம், பசுக்களில் காமதேனு, தேவரில் விஷ்ணு, வர்ணங்களில் அந்தணன், நதியில் கங்கை, ரத்தினங்களில் கௌஸ்துபம் போல் மாதங்களில் சிறந்தது வைசாகம். அம்மாதத்தில் மானிடருக்கு நன்மை புரியக் கருதி பகவான் கட்டளையிட, தீர்த்த தேவதைகள் சூர்யோதயம் முதல் ஆறு நாழிகை வரை நீரில் வசிக்கின்றனர். அச்சமயம் விதி வழுவாது நீராடுவோரது பாபத்தை அகற்றி வேண்டிய வரமளிக்கின்றனர். ஸ்நானம் செய்யாதவரைச் சபிக்கின்றனர்.

வைசாகத்தில் செய்யும் சகல தானங்களும் திவ்வியமான பலனை அளிக்கும். விசேஷமான, அவசியம் செய்தே தீர வேண்டிய சில தானங்களுள், தீர்த்த தானம் மிகச் சிறந்தது. தண்ணீர்ப் பந்தல் வைப்போர் தனது குலத்துடன் பல்லாயிரமாண்டு வைகுண்டத்தில் வசிப்பர். குடை, விசிறி, உதகும்பம் இவைகள் தானத்திற்கு மிகச் சிறந்தவை. நீர் தானம் செய்யாதவர். கழுத்தில் ஓர் துவாரமிருப்பதால் குனிந்து தீர்த்தமருந்த முடியாமல் மழைத் துளிகளை எதிர்பார்த்து நிற்கும் சாதக பட்சியாக பிறப்பர். விசிறி அளிக்காதவர் வாத ரோகத்தால் பீடிக்கப்படுவர். சகல துக்கங்களையும் அகற்றவல்ல குடை தானம் செய்யாதவர் பேயாக பிறப்பர். பாதுகை, அநாதைகள் நிழலில் நிற்க மண்டபம், அன்னம், படுக்கை, பாய், தலையணை, கம்பளம், துணி, குங்குமம், சந்தனம், கோரோசனை, மாம்பழம், தாம்பூலம் முதலிய தானங்கள் வைசாகத்தில் செய்யத்தக்கன. அன்ன தாதா பிதா ஆவான். படுக்கை தானம் நோயை அகற்றும். தலையணை தானம் ஏழு ஜன்மத்தில் செய்த பாபத்தை நீக்கும். கம்பளம் அபமிருத்யுவை அகற்றும். குங்கும புஷ்பங்கள் ராஜ பதவியைத் தரும். சந்தனம் எலும்பு, சதைகளிலுள்ள பாபத்தைப் போக்கும். நீர் மோர் செல்வத்தை அளிக்கும். தண்டுலம் ஆயுளைப் பெருக்கும். வெள்ளரிக்காய், கரும்பு,பானகம் இவை கோரிய பலனைத் தரும். பானக தானத்தால் பித்ருக்கள் சந்தோஷமடைகின்றனர். நூறு கயா சிராத்தத்திற்கு சமம் பானக தானமாகும்.

ஸத்கதை, தீர்த்த யாத்திரை, ஸத் சங்கம் அன்ன தானம், அரசமரம் வளர்த்தல், சத்புத்ரன் இவைகளில் ஒன்றேனுமில்லாதவர்கள் நற்கதி பெறார். வைசாக ஸ்நானம் செய்வோர் எண்ணை, பகல் தூக்கம், கட்டில், நிஷித்த பக்ஷணம், வீட்டில் ஸ்நானம், இரவு போஜனம், இருமுறை போஜனம் இவைகளை விலக்க வேண்டும். வைசாக ஸ்நானம் செய்யாதவர் கழுதையாகவும், சண்டாளனாகவும், நாயாகவும், பேயாகவும்.

பிறப்பர். ஸ்நானம் செய்தும் தானம் செய்யாதவர் தரித்திரனுக பிறப்பர். வைசாக விரதத்தை விட்டு மற்றெதைச் செய்தா லும் உப்பில்லாத பாகம் போல் பயனற்றதாம். வைசாக ஸ்நானமும் வைகுண்டநாதன் பூஜையுமில்லாதவர் பன்றி யாகப் பிறப்பர்.

உலகைப் படைத்த பகவான் எல்லோருக்கும் எல்லா காரியங்களுக்கும் அனுகூலமாக வசந்த ருதுவைப் படைத்து அக்காலத்திலே ரமாதேவியுடன் சகல தேவகணங்களும் சூழ பாரினில் ஒவ்வோர் வீட்டிற்கும் வருகிறார். அச்சமயம் ஸ்நான தானம் செய்யாதவரது செல்வத்தை அபகரிக்கிறார். வைசாகத் தில் சுலபமான நீர் தானத்தையேனும் செய்ய வேண்டும். இல்லையேல் உத்தம மானிட ஜன்மாவை இழந்து மிருகம், பறவை, புழுக்களாக பிறப்பர்.

இக்ஷ்வாகு வம்சத்தில் ஹேமாங்கன் என்றோர் அரசனிருந் தான். அவன் செய்யாத தானமில்லை. ஆனால் எளிதில் எங்கும் கிடைக்கும் என்பதால் நீர் தானம் மட்டிலும் செய்யவில்லை' ஏழை, கூன், குருடு, நொண்டி முதலியோருக்கே விசேஷமாக தானம் செய்வான். நீர் தானம் செய்யாத குற்றத்தால் மூன்று பிறவி சாதகமாகவும், ஓர்பிறவி கழுகாகவும், ஏழு பிறவி நாயாக வும் பிறந்து கடைசியாக பல்லியாக பிறந்து மிதிலா நகரில் சுருத கீர்த்தி எனும் அரசன் அரண்மனையில் தங்கியிருந்தான். தற்செயலாக அங்கு சுருததேவர் எனும் பெரியவர் வர, மன் னன் மது பார்க்க பூஜை செய்து, அவர் திருவடி நீரைத் தன் தலையின் மீது தெளித்துக் கொண்டார். அந்த நீர் இந்த பல்லி மீது பட அதற்கு பூர்வ ஞானம் உண்டாகி "என்னைக் காத்தருளும்" என்று கதறிற்று. முனிவர் நீ யார்? ஏன் இவ்வுடலெடுத்தாய்? என்று வினவ, பல்லி "வஸிஷ்ட சிஷ்ய னை இக்ஷ்வாகு குமரன் ஹேமாங்கன் யான். எவ்வளவு நட்சத் திரங்கள் உள்ளனவோ அவ்வளவு கோ தானம் செய்தவன். ஆனால் பல பாப ஜன்மங்களை எடுத்து இப்போது இந்த உடலி

விருக்கிறேன். தாங்கள்தான் இதற்குக் காரணம் கூறி எனக்கு நற்கதி அளிக்க வேண்டும்'' என்றது. மஹரிஷி ஞானக் கண்ணுல் அறிந்து, ''உனக்கு குரு பல முறை கூறியும் நீ அலட்சியமாக நீர் தானம் செய்ய செய்யவில்லை. அன்றியும் தானங்களை ஸத்பாத்திரத்திலளிக்க வேண்டும். அதை விட்டு நீ அங்கஹீனருக்களித்தாய். அது கருணையாலளிக்கும் உதவியே தவிர தானமாகாது'' என்றுரைத்து தான் செய்த தீர்த்த தான பலத்தை அதற்களித்தார். அப்பல்லி உடலைவிட்டு ஹேமாங்கன் கருத்ஸ்த புத்திரனுக பிறந்தான். இதைக் கண்டு வியந்த சுருதகீர்த்தி தர்ம சூட்சுமத்தைக் கூறும்படி கேட்க சுருததேவர் கூறுகிருர்:

இம் மாதத்தில் மாம்பழம், தத்யன்னம் இவைகளை அளிப்பதும் ஸாதுக்களுக்கு விசிறுவதும் உத்தமம். மஹா விஷ்ணு பூஜையால் மக்களைப் பெறலாம். இங்ஙனம் செய்யாதவர் பேயாகவும் ராட்சஸராகவும் பிறப்பர். ரேவா தீரத்தில் தீர்த்த யாத்திரை நிமித்தம் செல்லும்போது என்னை ஓர் பேய் அடித்து தின்னவந்தது. ஆனுல் எனதருகே வரமுடியாமல் தூரே நின்று அட்டகாசம் செய்தது. நீ யார்? என்று நான் கேட்க, ஆனர்த்த தேசத்திலே பூவர புரத்திலே ஸங்கிருதி கோத்திரத்திலே யான் பிறந்தவன், மைத்ரன் என்பது எனது பெயர். சகல தான தர்மங்களையும் செய்தேன். அன்னதானம் மட்டிலும் செய்தேனில்லை. ஆதலின் பசி தாகத்தினுல் வாடிப்போய் திரிகிறேன். எனது புதல்வன் சுருத தேவனைக் கண்டு வைசாக அன்னதானத்தினுல் எனது துயரைத் தீர்க்கும்படி கூறுமென்றது. இதைக் கேட்ட யான், நானே உமது புத்திரன். விரைவில் தங்கள் துன்பத்தை அகற்றுகின்றேனென்று விடைபெற்று விதிப்படி வைசாக ஸ்நான தானதிகளால் தந்தையை வைகுண்டமனுப்பினேன்.

மானிடர் இம்மை சுகம் பெற பரமன் நீர், அன்னம் ஔஷதம், இம்மூன்றையும், மறுமை சுகத்திற்கு ஸத்சேவை,

விஷ்ணு சேவை, தர்ம சேவை இம்மூன்றையும் முக்கிய சாதனங்களாக அமைத்தார். இதில் ஸத் ஸேவாதிகளை விட்ட தக்ஷன் சரிதத்தை கேள். தக்ஷன் ஓர் வேள்வி செய்யக் கருதி அதற்கு தாக்ஷாயணி எனும் தன் மகளையும் மாதேவனையுமழைக்க கைலாசஞ் சென்றார். தக்ஷனைக் கண்டு பரமசிவன் எழுந்திருக்கவில்லை. சினங்கொண்ட தக்ஷர் குருவுக்கெழுந்திராசீடன், பதிக்கெழாத மனைவி, பெரியாருக்கெழா சிறுவன் ஆயுள், பலம், கீர்த்தி முதலியவைகளை இழப்பான்ன்றோ என்றார். மஹேசன் புன்னகையுடன் "ஆதலால்தான் சிஷ்யனான உனக்கு நான் எழவில்லை" என்றார். இன்னும் அதிகம் குரோதம் கொண்டு தக்ஷன் சிவநிந்தை செய்து அவரை அகற்றி வேள்வியை ஆரம்பித்தான். இதை உணர்ந்த விஷ்ணுவும் பிரம்மனும் அங்கு செல்ல மறுத்தனர். தக்ஷகுமாரி தன் பதியைப் பழித்த பாதகனது பாபத்தைப் போக்க யாகசாலைக்கு சென்றாள். தக்ஷனுக்கு பயந்து தாயும் தன்னை வாவென் அழைக்காததினால் தக்ஷனுக்குச் சில புத்திமதி கூறி ஸதீ யாக தீயில் உடலை விட்டாள். சிவனது ஜடையிலிருந்து தோன்றிய வீரபத்ரன் தக்ஷனது அத்வரத்தை அழித்தான். மந்திர பலத்தால் சேனைகள் அறுக்க முடியாதிருந்த தக்ஷன் தலையைத் தானே அறுத்து அக்னியில் ஆஹு (ு)தி செய்தார். தேவர்கள் பற்பல அங்கங்களை இழந்தனர். பிரம்மனது பிரார்த்தனைக்கிணங்க பரமசிவன் தக்ஷன் தலையையும் தேவரிழந்த அவயவங்களையும் தந்தருளினார். தர்ம சேவையை இழந்ததால் தனக்குண்டான துன்பத்தை உணர்ந்த தக்ஷன் தருமத்தில் பேரவா கொண்டான்.

தாக்ஷாயணி தன்னை நாடித் தவம் செய்த இமயவன் கன்னிகையாகத் தோன்றினாள். சிவன் தவக்கோலத்துடன் ஆலமரத்தடியே தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்தார். அம்பிகை கன்னிகையாக ஓரிடத்திலே, ஐயன் துறவியாக மற்றோரிடத்

திலே என்ருல் உலகிற்கேது இன்பம்? சிவனும் சக்தியும் சேர்ந்தாலன்ரே சாந்தியும் இன்பமும் உலகிலே நிலவும்!

தாரகனென்னும் அரக்கன் தேவரைத் தாக்கினன், முனிவரை விரட்டினன், எளியோரை உண்டு ஏப்பம் விட்டான். அறத்தை அழித்தான். அமரர், யக்ஞ யாகாதிகளில்லாது உணவையு மிழந்து அரக்கனிடம் அடியும்பட்டு சொல்லொணுத் துன்ப மடைந்தனர். தாரகனே சிவன் சன்யாசியாயிருப்பதால், அவ ரிடம் பிறக்கும் குழந்தையைத் தவிர மற்ருேரால் மரணமில்லை என வரம் பெற்ருன். வானவர் பிரம்மனை வேண்ட அவர் சிவ னருளைப் பெற்று பார்வதி விவாஹத்திற்கு ஏற்பாடு செய்யும் படி கூறினர். இந்திரனுணைப்படி மன்மதன் ருத்ரன்மீது பாண மெய்து நெற்றிக்கண்ணுல் சாம்பலாயினன். ரதி உடன்கட்டை ஏற அசரீரி அவளைத் தடுத்து விரைவில் உன் பதி கண்ணன் குமாரனக பிறப்பான். ஆனல் சிவாபசாரம் செய்ததால் பிறந்த உடன் காணுமற்போவான் என்றது.

அதைக்கேட்டு ரதி சிறிது ஆசுவாசமடைந்தாள். அமரர் அவளை அணுகி, முன் கல்பத்தில் உனது புருஷன் ஸுந்தரன் என்ற அரசன். அச்சமயம் நீ ருதுவாயிருந்து தீட்டை வீட்டில் கலந்தாய். அந்த தோஷத்தினல் பதியை இழக்க நேர்ந்தது. நீ அதற்குப் பிராயச்சித்தமாக வைசாக விரதம் செய். உன் கணவனதைச் செய்யாததாலும் உனது தோஷத்தாலுமே அங்கத்தை இழந்தான் என்றனர். அங்ஙனமே அவள் வைசாக விரதத்தைச் செய்து வந்தாள்.

பர்வத ராஜகுமாரி தவஞ்செய்து பரமசிவனைப் பதியாகப் பெற்ருள். ஆதி தம்பதிகள் இருவரும் கூடிக்குலவி இல்லற இன்பத்திலீடுபட்டனர். பிரதி தினம் அவர்களது சேர்க்கை யால் கரு தரிக்காமலிருந்தது. தாரகன் மாண்ட பிறகே இந்திரன் தனது ஹத்தி தோஷத்தை ஏற்ற பெண் மக்களுக்கு கர்ப்பிணி கணவனுடன் சேர்ந்தால் கருவிற்கு நாசமில்லை என

வரந்தந்தார். தேவி தனது தேவனுடனிருந்தபோது கர்ப்ப மாகாமலே இருந்தது. இவர்களிடம் பிறந்த குழந்தையல்லவா சூரனை வெல்பவன்! தேவர் ஒன்று கூடி யோசித்து அக்னி பகவானை அவர்களிடமனுப்பினர், உமையவள் அன்னிய புருஷனைக் கண்டதும் அகல, சிவ வீர்யம் கீழே சிந்திற்று. அதை அக்னியே சுமக்கும்படி தேவ தேவனுணையிட, பத்து மாதம் சுமந்து சுமக்க முடியாத காலத்தே தேவர் கூறிய மந்திரத்தால் கருவை கனல்தேவர் கங்கையிலே விட்டார். சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகள் தோன்ற பிரம்மன் உத்திரவுப்படி கிருத்திகைகள் பால் கொடுக்க எடுத்தனர். அச் சமயம் ஓர் உடலும் ஆறு முகமுமாக மாறினன் குமரன். அச் சரவணபவனை அன்னை பார்வதி கைலயங்கிரிக்கு அழைத்துச் சென்ருள்.

ச்ராவண சுக்ல த்வீதியையில் ஆரம்பித்து ரதிதேவி அசூன்யசயர விரதமும் செய்தாள். ஆவணி முதல் நான்கு மாதமும் லக்ஷ்மீ சமேதனுகவும், மார்கழி முதல் நாலு மாதம் ருக்மிணியுடனும் சித்திரை முதல் நான்கு மாதம் பூதேவியுடன் நியமத்தோடு மாதவனைப் பூஜித்து முடிவில் பன்னிரண்டு கலச பிரதிமாதிகளைக் கொண்டு உத்யாபனம் செய்து முடித்தாள். கணவனும் எழுந்து வந்தான்.

வைசாகத்தில் குடை தானத்தால் மேன்மையுற்ற மன்னன் கதையைக் கேள்! வங்க தேசத்தில் குசகேதுவின் புத்திரன் ஹேமகாந்தனென்ருேர் அரசனிருந்தான். அவன் வனம்சென்று வேட்டையாடிக் களைத்துப் பசி, தாகம் மேலிட்டு முனிவர் ஆச்ரமஞ் சென்ருன். மஹரிஷிகள் நிஷ்டையிலிருந்ததால் மன்னனின் விருப்பைப் பூர்த்தி செய்யவில்லை. பசியால் கோபங் கொண்டு தபசிகளைச் சிக்ஷிக்க ஆரம்பித்தான். சீடர்கள் ஓடி வந்து குருவைக் காக்க முயன்றனர். அரசன் பொல்லாக் கோபத்திற்காளாகி முன்னூறு சீடரைக் கொன்று ஊருக்குத் திரும்பினன். இதையறிந்த அவரது தந்தை அம்மஹா பாதகி

நன்னாட்டிலே காலடி வைக்கக் கூடாதென காட்டிற்கே விரட்டினான். இருபத்தெட்டாண்டுகள் வனவாசஞ் செய்தான். அங்கு அவனை முன்னூறு பிரும்மஹத்திகளும் சூழ்ந்து பல வகையாக பீடித்துக் கொண்டிருந்தன. ஓர் வைசாக மாதத்தில் திருதர் எனும் ரிஷி தீர்த்த யாத்திரைக்குச் சென்று வழியறியாது வனத்தில் சிக்கி வெயிலால் வாடி மூர்ச்சையாக விழுந்து கிடந்தார். அவரைக் கண்டவுடன் ஹேமகாந்தன் இறக்கங் கொண்டு சிறிது ஜலமளித்து இலைகளாலாகிய ஓர் குடையு மளித்தான். அவர் அயலூர் சென்றார். ஹேமகாந்தனுக்கு கடைசி காலம் வந்தது. மூன்று யமகிங்கரர் தன்னைக் கூட்டிச் செல்ல வந்திருந்ததைக் கண்டான். அவர்களைக் கண்டு அஞ்சி அழ வேண்டிய காலத்திலே குடை, நீர் தந்த புண்ணியத்தால் விஷ்ணுஸ்மரணமுண்டாயிற்று. அந்திய காலத்தில் அச்சுதனை நினைப்போருக்கு ஆபத்து வருமோ? ஹரியின் ஆணைப்படி விஷ்வக்ஸேனர் யமதூதரை விரட்டி அவருக்கு நீண்ட ஆயுளைத் தந்து தானே அவர் தந்தையிடம் இவரை அழைத்துச் சென்று ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார்.

இவ்வளவு சுலபமாகவும் சிறந்ததாகவுமுள்ள வைசாக விரதத்தை ஏன் எல்லோரும் அனுஷ்டித்து நன்மை பெறவில்லை என்று அரசன் கேட்க, சுருத தேவர் கூறினார்: முன்னர் காசியில் இக்ஷ்வாகு வம்சத்தில் ந்ருக புத்திரனை கீர்த்திமான் என்றோர் ராஜனிருந்தான். அவன் வேட்டையாட வனஞ்சென்று ரிஷி குமாரர்கள் கிணறு, குளம் வெட்டுவதையும், தண்ணீர்ப் பந்தல் நடத்துவதையும், விசிறுவதையும், நிழலுக்காக வழியில் மண்டபம் அமைப்பதையும், கரும்பு, சந்தனம், தாம்பூலம், பழம், பானகம், குடை முதலியவைகளை அளிப்பதையும் மரத்தின் கீழ் பெருக்கி ஜலந்தெளிப்பதையும் கண்டு நீங்கள் யார்? எதற்காக இதைச் செய்கிறீர்கள்? இதன் பயனென்ன? என வினவினார். அவர்கள், நாங்கள் வஸிஷ்ட சீடர்கள், குருவின் உத்திரவுப்படி இதைச் செய்கிறோம். இதன் பயனைக் கேட்க அவகாசமுமில்லை, எண்ணமுமில்லை என்று

அவசர அவசரமாகக் கூறிவிட்டு தமது வேலையிலீடுபட்டனர். பார்த்திவன் வஸிஷ்டரைத் தேடி வணங்கி இதையே வினவினுன். அவர் வைசாக பெருமையைக் கூறி அச்சமயம் செய்யும் சிறிய புண்ணியமும் பெரிய பலனை அளிக்கும். ஆதலின் நீயும் உனது குடிகளும் இதைச் செய்து நன்மை பெறுங்களென்ருர். அரசன் அங்ஙனமே, எட்டு வயதிற்கு மேற்பட்டு எண்பது வயதிற்குட்பட்டவர் அனைவரும் வைசாக விரதமனுஷ்டிக்க வேண்டும். இல்லையேல் கடுமையாக சிக்ஷை அடைவர் என்று பறை சாற்றி எல்லோரும் அனுஷ்டிக்கும்படி செய்தார். அதனுல் அகால மரணம் அகன்றது. நகரத்திலுள்ளோர் சுவர்க்கம் சென்றனர். யமதர்மராஜன் வேலையில்லாமல் உத்தியோகம் செய்வது பாபமெனக் கருதி கீர்த்திமானுடன் போருக்குச் சென்ருர். பகவான் மன்னனைக் காக்க சக்கரத்தை ஏவினுர். அது யமனைத் துரத்த அவர் எங்கும் சரணமின்றி கதற, கீர்த்திமான் அதையே துதித்து யமனுக்குண்டான ஆபத்தை அகற்றினுர். யம தர்மன் பிரம்மனிடஞ்சென்று வேலையின்றி ஊதியம் பெறுவோர் பூனையாகப் பிறப்பர். கீர்த்திமானது செய்கையால் இச்சமயம் வைசாகமனுஷ்டிப்பவரின் இருபத்தோரு தலைமுறை நகரத்திலிருந்தோர் சுவர்க்கம் சென்றனர். எனது சித்ர படத்தில் எழுத ஒன்றுமில்லாது சூன்யமாக இருக்கிறது. பழையதும் அழிந்தது என்று முறையிட்டான்.

பிரும்மா, தாஸர்கள், தங்களால் முடியாத காரியத்திற்காக சிக்ஷிக்கப்பட்டார். சக்தியிருந்தும் செய்யாமலிருப்பதே குற்றம். ஹரி பக்தனைக் கெடுப்பது முடியாது, நல்லதல்ல, நீயும் வா, விஷ்ணுவிடம் செல்வோமென்று யமனுடன் வைகுண்டஞ் சென்ருர். தன் திருவடியைப் பணிந்து போற்றுபவர்களைப் பார்த்து பகவான் உங்களது உள்ளத்தை உணர்வேன். அவசியமானுல் நான் கருடனையும் ஏனைய எனது சின்னங்களையும் வைகுண்டத்தையும் லக்ஷ்மியையும்கூட விடுவேன். என் பக்தனை மாத்திரம் விடமாட்டேன். அவனுக்கு பத்தாயிர

ரண்டு ஆயுள். அதில் எட்டாயிரம் முடிந்து விட்டது. விரை வில் அவனுக்கு ஸாயுஜ்யமளிப்பேன். பின்னர் வேனன் என்ற அரசஞ்கி வேதமோதிய தர்மமனைத்தையும் வைசாக தர்மத்தை யும் அழிப்பான். பின்னர் யான் ப்ருதுவாக அவதரித்து தர்மம் தழைத்தோங்கும்படிச் செய்கிறேன். தனது வேலையில் ஊக்கங் கொண்ட யமனை நாடி இனி அவனியிலுள்ளோர் அர்க்யம், தானம் முதலியவைகளைச் செய்யட்டும். அதை விட்டு மற்ற தர்மத்தைச் செய்வோரது பூர்ண பலனும் யமனையே சாரு மென்று கூறி அவர்களை அனுப்பினர். அன்று முதல் யமனை நாடி பூர்ணிமையில் அன்னதானம், தீர்த்த தானம் செய்யப்படு கிறது. வேனன் இவைகளை நிறுத்திய பின் பலரில் ஒருவரே தர்ம சூட்சுமத்தை உணர்ந்து வைசாகமனுஷ்டிக்கின்றனர்.

வைசாக ஸ்நானத்திற்கு பகவதாராதனம் பகவத் கதா ச்ரவணம் தானம் என்பன அங்கங்காளம். கதா ச்ரவணத்தின் பெருமையை விளக்க ஓர் இதிகாசம் கூறுகிறேன் கேள்: கோதாவரியில் பிரும்மேச்வர க்ஷேத்திரத்திலே சத்ய நிஷ்டர், தபோ நிஷ்டர் என இரு துருவாச சிஷ்யரிருந்தனர். சத்ய நிஷ்டர் சதா பகவத் கதையிலீடுபட்டவர். கூறுபவர் கிடைத்தால் சகல கர்மாக்களையும் சுருக்கிக் கொண்டு ச்ரவணம் செய்வார். இல்லையேல் தான் கதை கூறுவார். எங்கு சத் சங்க மும் சத் கதையுமில்லையோ அது கங்கா தீரமாயினும் அங்கு தங்கக் கூடாதென்ற சொல்லைக் கைக் கொண்டவர். கதா ச்ரவணமில்லாதவர் கழுதையாகப் பிறப்பர் என்பதை நம்பிய வர். தபோநிஷ்டர், கர்மநிஷ்டர். கர்மலோபம் வந்து விடுமோ என்றுகதையைப் பற்றியே கருதாதவர். தபோநிஷ்டர் இறந்த பின் சின்ன கர்ணன் என்ற பேயாக பிறந்தார். சத்ய நிஷ்டர் பைடீநஸீ எனும் நகரை நாடிச் செல்லும்பொழுது கானகத்தே காதிழந்த பேயாயுள்ள தன் சோதரனைக் கண்டார். அவனது பரிதாப நிலைக்கு வருந்தி தான் வைசாக புராண ச்ரவணம் செய்த புண்ணியத்தின் ஓர் முகூர்த்த புண்ணியத்தைத் தந்து அவனை வைகுண்டத்திற்கனுப்பினர்.

வைசாகத்தில் நீர் தானம் செய்யாதவர் சரிதத்தைக் கேள்! பாஞ்சால நாட்டிலே பூரியசஸ் என்றோரரசனிருந்தான். அவனது கோசம் திடீரென குறைந்தது. சேனைகள் நோயால் சேதமாயின. துர்பிக்ஷமும் தோன்றிற்று. சமயம் பார்த்து சத்ருவும் அந்த ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டான். சிகிநீ எனும் மனைவியுடன் மன்னன் ஒருவருமறியாமல் காட்டிற்குச் சென்றான். அங்கு முப்பத்தைந்து ஆண்டுகளைப் பல கஷ்டங்களுடன் சிந்தையிட்டுக் கழித்தான். தனது குருவை அக்காலத்தில் பலமுறை நினைக்க யாஜக உபயாஜகர் என்ற ஆசார்யர்கள் தற்செயலாக அங்கு வந்தனர். தனக்கு நேர்ந்த பெருந்துன்பத்திற்குக் காரணம் யாதென வேந்தன் வினவ, அவர்கள் ஞான திருஷ்டியால் அதை உணர்ந்து முன்னம் நீ பத்து தலைமுறை வேடனாக இருந்தாய். பத்தாவது பிறவியில் நீ ஸஹ்யமலையில் ராட்சஸனைப்போல் கௌடதேச ஜனங்களைப் பீடித்து வந்தாய். அச்சமயம் த்யையில்லாததால் இச்சமயம் புத்திரனில்லாதவனாகவும் நம்பியவரைக் கெடுத்ததால் சகோதரனற்றவனாகவும் ஹிம்ஸையால் நண்பனற்றவனாகவும் ஸாதுக்களை அவமதித்ததால் சத்ரு பயமுள்ளவனாகவும் தீர்த்தங்கூட தானம் செய்யாததால் ஏழையாகவும் ஆனாய் என்றார்கள். இவ்வளவு பாபத்தினிடையே அரசனாகப் பிறக்க புண்ணியம் யாதோ என்று மன்னன் கேட்டான். காட்டில் இரு தனிக வைசியர்களும் கர்ஷணன் என்ற ஓர் வேதியனும் வெயிலில் வாடி ஓர் மரத்தின் கீழ் அமர்ந்தனர். நீ அவர்களை அடித்துப் பணத்தை பறிக்க ஆரம்பித்தாய். அவர்கள் ஓட ஒரு வைசியனைக் கொன்று விட்டாய். மற்றவர்கள் ஓட வைசியன் தனத்தை ஓர் புதரில் எறிந்துவிட்டு தானும் பதுங்கிக் கொண்டான். அந்தணன் ஓடமுடியாமல் வழியில் விழுந்து மூர்ச்சை அடைந்தார். அவருக்கு ஜலமளித்து களைதெளிந்தெழுந்திருக்கும்படி செய்து தனமெங்கே? வைசியனெங்கே? என்றாய் அவர் உன்னிடம் பயந்து ஏதோ ஓரிடத்தை காட்டி ஓடிவிட்டார். உன் காரியத்திற்காவாவது ஓர் உத்தமனுக்கு ஜலமளித்தாய். அது வைசாக மாதம். அப்புண்ணியத்

தால் அரசனுகப் பிறந்தாய். இப்பொழுது வைசாக விரதம் செய் கோதானத்தால் கோசமும், படுக்கையால் சுகமும், குடையால் ராஜ்யத்தையும் தண்ணீர்ப் பந்தலால் மற்ற பாக்கியங்களையும் பெறுவாய் என்று குரு கூறினர். அங்ஙனம் அரசன் அனுஷ்டிக்க பந்துக்களிவனைச் சூழ்ந்தனர். இவனது நிலையை உணர்ந்த பகைவர்கள் பாஞ்சாலத்தை விட்டுப் பறந்தோடினர். முன்போல் மன்னன் ராஜ்யபாரம் செய்து வைசாக விரதத்தை நிஷ்காம்ய மாகச் செய்தான். நாடு செழித்தது ஐந்து புதல்வர் பிறந்தனர். ஒரு நாள் அவனது தர்மத்திற்கு மகிழ்ந்த திருமால், சங்கு சக்ர பீதாம்பரதாரியாக கருடவாகனத்திலேறி லக்ஷ்மீ தேவியுடன் காட்சியளித்தார். பார்த்திவன் பரமனது திருவடியிற் பணிந்து ஆனந்த பாஷ்பம் பெருகப் போற்றினன். யாது வரம் வேண்டு மென பகவான் கேட்க, அசஞ்சலமான பக்தியையும் கண்கள் கண்ணனையே காணவும் காதுகள் அவன் கதையையே கேட்க வும் நாவு நாரணன் நாமத்தையே கூறவும் வரம் வேண்டினன். பகவான் அவைகளைத் தந்து தான் தரிசனமளித்தது த்ருதீயை அன்று செய்யும் தான தர்மம் அக்ஷய்யமான பலனைத் தருவ தால் அன்று முதல் அதை அக்ஷய த்ருதீயை என்றழைப்ப ரென்றும் கூறி மறைந்தார்.

வைசாக மகிமையை விளக்க மற்றுமோர் சரிதம் கூறு கிறேன்! பம்பா தீரத்தில் சங்கன் என்ரோர் வேதியரிருந்தார். அவர் தீர்த்த யாத்திரைக்குச் செல்லும்போது ஓர் வனத்தில் கோடை வெயிலில் வாடி ஓர் மரத்தடியே அமர்ந்தார். ஆங்கு ராட்சஸனைப்போல் ஓர் வேடன் வில்லும்அம்புமாக அவர் முன் தோன்றி அவரது குடை செருப்புகளையும் ஆடை ஆபரணங்க ளும் அபகரித்தான். அவர் வெயிலால் கொதிக்கும் மணலில் காலை வைக்க முடியாமல் புழுப்போல் துடிப்பதைக் கண்ட வேடன் மனமும் இறங்கிற்று. தனக்குப் பயன்படாத கிழிந்த செருப்புகளை அவருக்குக் கொடுத்தான். அவர் பரம சந்தோ ஷம் கொண்டு வைசாக மாதத்தில் அவன் செய்த தானத்திற்கு

பகவான் பரமப்ரீதியுடன் ஆசீர்வதிப்பார் என்ருர். பாதுகாதான புண்ணியத்தால் பகவான் யார்? எது தர்மம்? தர்மத்திஞல் வரும் பயன் யாது? என கேட்கவேண்டுமென அவனுக்கு உதித்தது. அவர் வைசாக மகிமையைக் கூறிவரும் போது ஓர் யானேயும். சிங்கமும் சண்டையிட்டுக் களேத்து இவர்களருகே பூமியில் வந்து வீழ்ந்தன. சங்கன் கூறிய சில சொற்கள் அவைகள் காதில் விழ உடனே அவ்வுடலேவிட்டு திவ்ய சரீரம் பெற்று முனிவரைப்போற்றி விடை கேட்டார்கள். சங்கன் நீங்கள் யார்? ஏன் மிருகமானீர்? என்று கேட்க அவர்கள் நாங்கள் மதங்க முனிவரது தந்தில, கோஹலர் என்று பெயருள்ள புதல்வர்கள் தந்தை வைசாக விரதத்தை அனுஷ்டிக்கும்படி கூற அதைச் செய்யாது அவரையும் அலட்சியம் செய்தோம். அதஞல் விலங்காஞேம். புராண ச்ரவணத்தால் நற்கதி பெற்ருேமென்று கூறித் தந்தையிடம் சென்றனர்.

இதைக் கண்டவுடன் வேடனுக்கு ஆச்சரியமும் தர்மத்தில் ஆசையும் சங்கனிடம் அன்புமுண்டாயிற்று. வில்லேயும், அம்பையும் முறித்தெறிந்தான். தனது குரூர செயல்களே நினேத்து வருந்தி இவருக்குச் செய்த தீங்கை எண்ணி வெட்கித்து நின்ருன். தனது குற்றத்தை மன்னித்து சீடஞக ஏற்று தர்மோபதேசம் செய்யும்படி வேண்டிஞன். சங்கன் ஜலாசயத்தைக் காட்டும்படி கூற அங்கு அழைத்துச் சென்று, இனிய கனிகளேயும் அவருக்களித்தான். அவர் நீராடி ஆந்ஹிகத்தை முடித்து, கனியுண்டு களேதீர்ந்து மரத்தடியே அமர்ந்து யாது கூற வேண்டுமென்ருர். முதலில் தான் வேடஞயிருப்பதற்குக் காரணம் யாதென்ருன். ஞானக்கண்ஞல் உணர்ந்து முனிவர் சொன்ஞர்.

சாகல நகரில் நீ ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் ஸ்தம்பன் என்ற வேதியஞயிருந்தாய். காந்திமதி என்ற அழகுள்ள மனேவியிருந்தும் வேசியிடம் ஆசை கொண்டாய். உத்தம பதிவிரதையான உன் மனேவி உனக்கும் உனது தாசிக்கும் பணி

விடை செய்துவந்தாள். சில காலம் சென்றபின் உனக்குக் கொடிய நோய் உண்டாயிற்று. பொருளைக் கறந்து கொண்டு தாஸி உன்னைக் கைவிட்டாள். தன்னை நீ மதிக்காதபோதும் உனக்கு ஆபத்து வந்த காலத்திலும் ஒரே மாதிரியாக பணி விடை புரியும் பத்தினியின் செயல் உன்னை வெட்கி அவளிடம் மன்னிப்பு கேட்கும்படி செய்தது. அவள் தனது வினையின்படி பயனுண்டாகிறதென்று கூறி இரவு பகலும் உண்ணாது உறங்காது உனக்குப் பணிவிடை செய்தாள். பல தெய்வங்களைப் பிரார்த்தித்தாள். ஒரு நாள் வைசாக வெய்யிலில் வாடி வதங்கி தேவலர் எனும் முனிவர் உனது வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்று நீரும் நிழலுமேனும் அளித்து உபசரிப்பது தர்மமென உன் மனைவி உணர்ந்தாள். ஆனால் உனக்கிஷ்டமில்லாததைச் செய்யவும் மனமில்லை. முனிவர் நிலையோ பாபமாக இருந்தது. ஆபத்திற்கு தோஷமில்லை என்று உன்னிடம், அவர் ஓர் வைத்தியர் என்று கூறி அவருக்கு வேண்டிய உபசாரம் செய்தனுப்பினாள். மறுநாள் உனக்கு மரணம் நேர்ந்தது. அவள் உன்னைச் சிதையிலிட்டு அனுமரணம் செய்தாள். உணவூட்டிய உன் மனைவியின் விரலை மரண காலத்தில் ஜுர வெறியால் கடித்தாய். அது உன் வாயிலே செல்ல பற்கள் மூடிக் கொண்டன. இத்தகைய பாபங்களால் வேடனாய்ப் பிறந்தாய். இறக்கும் காலத்தில் இஷ்டமில்லாமலே ஓர் வேதியனுக்கு நீர் நிழலளித்த ஸுக்ருதத்தால் தர்ம புத்தி தோன்றிற்று உனக்கு என்று சங்கன் கூற, வேடன் பகவானது ஸ்வரூபத்தைக் கூற வேண்டுமென்றான்.

பரமாத்மா வேத வேதாந்தங்களால் அறியத்தக்கவர். பூதங்கள் மானிடர் தேவர் ஸப்தரிஷிகள் அக்கி சூர்யன் குரு இந்திரன் உமை சிவன் புத்தி இவை ஒன்றைவிட மற்றொன்று நூறு மடங்கு மேலானவை. எல்லாவற்றையும் விட பிராணனே மேலானது. அதற்கு மேற்பட்ட பொருளே இல்லை. பரமாத்மா உலகைப் படைத்து அதற்கு ஸம்ராட்டாக பிரும்மாவிற்கு அபி

ஷேகஞ்செய்து இளவரசாக வரக்கூடியவர் யார் என்று தேவர்களையே கேட்டார். பலர் பலவகையாகக் கூறி பரமனையே கூறும்படி வேண்டினர். அவர் ஓர் உடலைக்காட்டி இதிலிருந்து எவர் வெளிக்கிளம்பினால் இவ்வுடல் அழியுமோ அவரே உயர்ந்தவர் என்றார். காலிலிருந்து ஜயந்தன் கிளம்பினான். நொண்டியாயிருந்தானே தவிர இறக்கவில்லை. குஹ்யத்திலிருந்து தக்ஷர் கிளம்ப நபும்ஸகனானான். இந்திரன் கையிலிருந்து கிளம்ப கை நொண்டியானான். சூர்யன் கிளம்ப குருடானான். திக்குகள் கிளம்ப செவிடானான். அக்னி கிளம்ப ஊமையானான். ருத்ரன் கிளம்ப மனமில்லா ஜடனானான். இங்ஙனம் எவர் கிளம்பியும் உடலுக்கபாயமில்லை. ஆனால் பிராணன் கிளம்பும்போது எல்லோரும் மிகத்துன்புற்று நீயே உயர்ந்தவன்! கிளம்பாதே என்று வேண்டினர். ஆதலின் பிராணனே சிறந்தது அதே வாஸுதேவனெனப்படுவது. அந்த பிராணனை ஏன் எல்லோரும் பிரகாசமாக பூஜிக்கவில்லை எனில், அது ஓர் வேள்வி செய்ய பூமியை உழுதது. அங்கு தவம் செய்து கொண்டிருந்த கண்வமுனிவர் சினங்கொண்டு உள்ளே மறைவாக இருந்த தன்னை வெளிப்படுத்தியதால் தீ பிரசித்தி பெறாமல் போவாய் என்று சபித்தார். பிராணனும் அவரை நீ குரு துரோகியாவாய் என சபித்தது. ஆதலால் பிராணனுக்கு பரமாத்மா தேவதையாயிருந்தும் அது பிரஸித்தமாகவில்லை. கண்வரும் குருவிடம் கற்றதை கக்கி மறுபடி சூர்யனிடம் வித்யாப்யாஸம் செய்தார். இப்படி சங்கன்கூறி வர அவரருகிலிருந்த வடவிருக்ஷம் திடீரென முறிந்துவிழ அதிலிருந்து ஓர் திவ்ய புருஷன் கிளம்பினான். சங்கன் அவரை நீ யாரென்று வினவ, பிரயாகையில் ரோசனன் என்ற அந்தணன் நான். ஜயந்தரெனும் பெரியார் வைசாக புராணம் படித்தார். அங்கு யான் தலைப்பாகையுடன் தாம்பூலதாரியாக அவருக்கு நமஸ்காரமும் செய்யாமல் உட்கார்ந்து கதை முடியும்வரை பேசினேன். ஆதலின் இறந்தபின் பல நரகங்களை அனுபவித்து இங்கு பாம்பாக பிறந்து உணவின்றி வருந்தினேன். நீர் கூறிய கதையைக் கேட்டு நற்கதி பெற்றேனென்று கூறி வணங்கி நிற்

க்ச் சங்கன் அவரை தழுவி நீ தாசார்ண தேசத்தில் வேதசர்மா என்னும் வேதியனுகப் பிறந்து பூர்வ ஞானத்துடன் வைசாக தர்மத்தைச் செய்து வைகுண்டம் செல்வாயென்ருர்.

வேடன் தனது முன்னே பலர் நன்மை பெற்றதைக் கண்டு வியந்து தனக்கும் அருள் புரியும்படி வேண்ட சங்கன் ஸ்ரீ ராம மந்திரத்தை உபதேசித்து க்ருணி எனும் முனிவர் கண்மூடி தவம் செய்வார். அவர் மேல் புத்து தோன்றும், ஆதலின் அவர் வால்மீகி எனப்படுவார். அவரது வீர்யம் அவர் தியானம் செய்யும் போது கிளம்பும். அதை ஒரு வேட ஸ்திரீ புஜிப்பாள். அவளிடம் நீ வால்மீகி என்ற பெயருடன் வெளிவந்து ஸ்ரீராமாயண கதை எழுதுவாய் என்று வேடனை அனுப்பி தானும் சென்ருர் என்று கூறி சுருத தேவர் மேலும் வைசாகத்தை வர்ணிக்கிருர்.

ஆனர்த்த தேசத்திய தர்மவர்மன் என்ற அந்தணர் எங்கும் கலியினுல் தர்மமழிவதைக் கண்டு வருந்தி குருக்ஷேத்ரஞ் சென்ருர். அங்கு ரிஷிகள் கிருதம் முதலிய யுகங்களில் பல்லாண்டு செய்வதைக் கலியில் சில நாட்களில் செய்து சித்திபெறக் கூடுமாதலால் கலி சிறந்த யுகமென்றனர். நாரதர் ஓர் கையால் நாக்கையும் மற்ருேர் கரத்தால் ஆண் குறியையும் பிடித்துக் கொண்டு ஆடினுர். அவ்விரண்டையும் ஜயித்தவருக்கே கலி நல்லதென்பது அதன் பொருள். கலியில் நடக்கும் தர்ம விருத்தமான செயல்களைக் கண்டு மனம் நொந்து தர்ம வர்மா பித்ரு லோகஞ்சென்ருர். அங்கு தலைகீழாக பாழுங் கிணற்றுக்கு மேலே ஒரே புல்லினுல் விழாமல் தொங்கும் தனது பித்ருக்களைக் கண்டார். அந்த ஓர் புல்லேதான் என்றும் அதை ஆயுள் எனும் எலி அறுப்பதையும் தன்க்குப் பின் சந்ததி இல்லாததால் அவர்கள் நகரத்தில் வீழ்வதையுங்கண்டு கலியில் அதர்மம் அதிகமாக பரவுவதால் எப்படி சந்ததியை விருத்தி செய்வதென்று அவர்களையே கேட்டான். பித்ருக்கள் விஷ்ணு கதை கேட்போர், ஸதாசாரசீலர், எவரிடம் சாஎக்ரமம் இருக்கிறதோ எவரிடம்

பாரதமுளதோ வைசாக ஸ்நானம் வைச்வதேவம் கார்த்திகதீபம் துளஸீ ரக்ஷணை இவைகளை எவர் செய்கிறார்களோ அவர்களைக் கலி அண்டுவதில்லை என்று கூறிய தர்மங்களைச் செய்து தர்ம வர்மா சந்ததியை விருத்திசெய்து அவர்களைக் காப்பாற்றினான்.

ஒரு சமயம் இந்திரன் பலியுடன் போர் புரிந்து அவனைப் பாதாளத்தில் துரத்திவிட்டு பூலோகம் வந்தார். உசத்யரது ஆச்ரமத்தில் ரதிபோன்ற முனிவர் மனைவி படுத்திருக்க அடக்க முடியாத காம வெறியால் அவளைப் பலாத்காரம் செய்தார். ஏற்கனவே கருவிலிருந்த முனி குமரன் பாதத்தினால் இந்திரன் இச்சை கைகூடாமல் தடுத்துவிட்டார். அதனாலவரைப் பிறவிக் குருடனாகும்படி சபித்து முனிவரிடம் பயந்து மேருமலையின் குகையில் பதுங்கி இருந்தார். இதை அறிந்த அசுரர் அமராவதியில் புகுந்து அமரரை இம்சித்தனர். பிருகஸ்பதி தேவருடன் மேரு குஹைக்கு வந்து சக்ரனை வெளியில்வரும்படி அழைத்தார். தேவேந்திரனோ பலத்தையும் தேஜஸ்ஸையுமிழந்து வஜ்ரத்தையும் தூக்க முடியாமல் லஜ்ஜையால் வாடி நின்றான். பிருஹஸ்பதி வைசாக ஸ்நான விரதங்களை உபதேசித்து அதன் மூலம் இழந்த சக்தியைப் பெறும்படி செய்து தேவராஜ்யத்தில் அவரை நிலைக்கச் செய்தார்.

வைசாக சுக்ல துவாதசி மிகப் புண்ணியமான காலம். அச்சமயம் செய்யும் தான தர்மங்கள் அக்ஷய்யமான பலனை அளிக்கும். அதன் பெருமையை விளக்க ஓர் இதிகாசம் கூறுகிறேன். காச்மீர தேசத்தில் தேவவிரதன் என்றோர் வேதியர் இருந்தார். அவர் மாலினி எனும் தன் மகளை சத்தியசீலன் என்பவனுக்கு மணம் செய்வித்தார். சத்தியசீலன் எல்லோருக்கும் நல்லவனாயிருந்தும் மாலினியின் மனதிற்கு மாத்திரம் பிடிக்காதவனாயிருந்தான்.

ஆதலின் அவள் துஷ்ட கன்னிகளது சகாயத்தால் யோகினி எனும் ஒருவளிடமிருந்து தன் கணவன் தனக்கு வசியமாகும்படி

ஓர் மருந்தை வாங்கிப் பதிக்களித்தாள். அதனுல் அவர் க்ஷய நோய்க்கு ஆளாகி அவளைச் சரண் புகுந்து தன்னைக் காக்கும் படி வேண்டினுர். முன்போல் யோகினியிடம் சென்று மாற்று மருந்து வாங்கித் தந்தாள். கணவன் படுக்கையிலிருக்கும் பொழுது இவள் கெட்ட சகவாசத்தால் கற்பையிழந்தாள். குஷ்டரோகத்தினுல் பீடிக்கப்பட்டிறந்தாள். பல்லாண்டுகள் இப் பாபத்தினுல் தாம்ப்ர பாஜன நரகத்திலிடர்ப்பட்டு நூறு பிறவி சொறி நாயாகப் பிறந்தாள். சௌவீர தேசத்தில் பத்ம பந்து எனும் அந்தணர் வீட்டு வாயிலில் அவர் புத்திரர் கால் கழுவிய நீரிலே இந்நாய் வீழ்ந்து புரண்டது. உடனே அதற்கு பூர்வ ஞானம் வர, தன் பாபத்தை அகற்றி தன்னைக் காத் தருளும்படி வேண்டிற்று. முனி குமாரர் அது பாபத்தை அனுபவிக்கட்டுமென்று உதவி செய்யாதிருந்தார். அவர் தந்தை, பரோபகாரம் மிகச்சிறந்த தருமமென்று தான் செய்த வைகாச துவாதசி விரத புண்ணியத்தை அதற்களித்தார். அதனுல் அது திவ்ய தேகம் பெற்று அப்ஸரஸாயிற்று. மறுபிறப்பில் ஊர்வசியாயிற்று.

வைசாக விரதத்தை அம்மாதம் பூர்ணமாக அனுஷ்டிக்க இயலாதவர் அமிர்தம் தோன்றிய அம்மாத ஏகாதசி, அதைப் பகவான் காத்த தினமான துவாதசி, அமரர் அமிருதமுண்ட த்ரயோதசி, பூர்ணிமை ஆகிய இந்த திதிகளிலேனும் ஸ்நான தான பகவதாராதன பகவத் கதாச்ரவணங்களை செய்ய வேண்டும். அல்லது அதிலும் அசக்தர் கடைசி மூன்று திதிகளிலேனும் செய்ய வேண்டும். பூர்ணிமையில் அன்னமளித்தால் சந்ததி விருத்தியாகும். அச்சமயம் ஸ்ரீபாகவதத்தைக் கேட்க வேண்டும். வைசாக புராணத்தைக் கேட்டலும் படித்தலும் சிறந்த தர்மம். வ்ருஷோத்ஸர்க்கம், கோ தானம் இவைகளுக்கு மிக உத்தமமான காலமிது. சகல புண்ணிய தீர்த்தங்களும் பகவானைப் பாபிகள் தங்களிடமளித்த பாபத்தை நீக்க வழிகூறும் படி வேண்டினர். அவர் வைசாகத்தில் கடைசி மூன்று நாளே

னும் முழுகாதவரிடம் போகும்படி செய்தார். சுலபமாக வெயில் காலத்தில் சரீரத்திற்கு அனுகூலமான வைசாக ஸ்நானத்தை செய்து இகபரசுகம் பெறுவதன் பெருமை சிவனால் கூறப்பட்டதென்று நாரதர் கூறி முடித்தார்.

அம்பரீஷன் இவ்வுத்தம கதை கூறிய தேவ ரிஷியைத் தேவோபசாரம் செய்து அனுப்பினான். இதைப் படிப்பதால் அனைவருக்கும் சகல ச்ரேயஸ்ஸுமுண்டாகும்.

வைசாக மகாத்மியம் சம்பூர்ணம்.

★

தாரித்ரிய ஹரண தேவி ஸ்துதி

இதை காலை மாலைகளில் மும்முறை நியமனத்துடன் ஜபித்தால் ஏழ்மை அகலும்.

1. யதுத்பவா: ஸத்வ ரஜஸ் தமோகுணு: ।
ஸர்க்க ஸ்திதி த்வம்ஸ நிதான காரிண: ।
யதிச்சயா விஸ்வமிதம் பாவபவௌ ।
தநோதி மூலப்ரகிருதிம் நதாஸ் மதாம் ॥

2. யாஹித்ரயோ விம்ஸதி பேதசப்திதா ।
ஜகத்யசேஷே ஸமதிஷ்டிதா பரா ।
யத்ரூப கர்மாணி ஜடாஸ்த்ர யோபி ।
தேவா நவித்யு: ப்ரகிருதிம் நதாஸ் மதாம் ॥
தேவா நவித்யு : ப்ரகிருதிம் நதாஸ் மதாம் ॥

3. யத்பக்தி யுக்தா: புருஷாஸ்து நித்யம் ।
தாரித்ர்ய பீமோஹ பரா பவாதீன் ॥
நப்ராப்நுவந்த்யேவஹி பக்தவத்ஸலாம் ।
ஸதைவ மூலப்ரகிருதிம் நதாஸ்மதாம் ॥